புதிய அவையம்
PUTHIYA AVAIYAM (PEER- REVIEWED JOURNAL)
ISSN : 2456-821X
(vol. 9 Issue: 01 June 2025)

==================================================================

# "தமிழ்நாட்டுப் பௌத்தச் சின்னங்கள், புத்தர்சிலைகள்: எதிர்கொள்ளும் சிக்கல்களும் தீர்வுகளும்"

- முனைவர் ஆ.பிரபு

==================================================================

**குறிச்சொற்கள்:**

பௌத்தம் - பௌத்தச் சின்னங்கள் – புத்தர்சிலைகள் – பௌத்த மீட்சி

**முன்னுரை:**

சுய சிந்தனையும் பகுத்தறிவையும் அடித்தட்டு மக்களிடம் கொண்டு சேர்த்த பெருமை கௌதம புத்தரால் உருப்பெற்ற பௌத்த சமயத்தினைச் சாரும். சனாதன எதிர்ப்பையும் பொதுவுடைமைச் சிந்தனையும் ஈராயிரம் ஆண்டுகளாக இம்மண்ணில் விதைத்து வருவது பௌத்தத்தின் தனி அடையாளமாகும். ஆசியக் கண்டம் எங்கும் பரவிப் பேரொளி வீசிய பௌத்தம் இந்தியாவின் தென்னகத்திலும் குறிப்பாகத் தமிழகத்திலும் நிலைபெற்றுப் பரவியது. அதற்கான தடயங்களும் சான்றுகளும் குறிப்புகளும் இங்கு மிகுதியாக கிடைக்கின்றன. இருப்பினும் பௌத்தம் சார்ந்த கட்டிடக்கலைகள், சிற்பங்கள் தமிழகத்தில் குறைவாகவே வெளிக்கொணரப்பட்டுள்ளன. அவ்வாறு கிடைத்துள்ள சிற்பங்கள் யாவும் பல்வேறு சிதைவுகளுக்கு உட்பட்டு புதர்களிலும் மண்மூடிய நிலையிலும் ஆங்காங்கே கிடைப்பது வேதனைக்குரியதாகும். பௌத்த அடையாளங்களை மீட்பதன் தேவையினையும் தீர்வுகளையும் பருந்துப் பார்வையில் விவரிப்பதே இக்கட்டுரை.

கட்டடக் கலைக்கு அடுத்தபடியாக உள்ளது சிற்பக் கலை ஆகும். கட்டடக் கலையை விட சிற்பக் கலை நுட்பமானது. 'கல்' என்னும் பொருளைக் கொண்டது 'சிலை'. இதன் தொடர்பாகவே 'சிற்பம்' எனும் சொல் உருவாயிற்று. இதன் பரிணாம வளர்ச்சியால் அழகுக் கலைகளுள் ஒன்றாக 'சிற்பம்' போற்றப்பட்டுச் 'சிற்பக்கலை' வழக்கில் வந்துள்ளது. பொதுவாகச் சிற்ப உருவங்கள் இரண்டு வகைப்படும். அவை,

(i). முழு உருவச் சிற்பங்கள்3D (முப்பரிமாணம்)

(ii) புடைப்புச் சிற்பங்கள் 2D (இரு பரிமாணம்)

முழு உருவச் சிற்பங்கள் என்பது, பொருள்களின் முன்புறம், பின்புறம் உட்பட முழு உருவமும் தெரிய அமைக்கப்படுவது, புடைப்புச் சிற்பம் (Bas relief) என்பது பொருள்களின் ஒருபுறம் மட்டுமே தெரியும்படிச் சுவர்களிலும், பலகைகளிலும், கல்லிலும் அமைக்கப்படுவது.

புத்தரை மனித உருவில் காட்டாத தொன்மைக் காலமான, அதாவது தேரவாத பௌத்தம் பிரிவு காலத்தில், புத்தரின் குறியீடுகளான பாதச் சுவடுகள், தர்மச் சக்கரம், மரம், குடை ஆகியவை சிற்பங்களில் இடம் பெற்றன. இச்சிற்பப் பிரிவு மௌரியப் பேரரசர் அசோகர் காலத்திலேயே தொடங்கப்பட்டது. அசோகர் காலச் சிற்பக் கலைக்கு சிறந்த எடுத்துக்காட்டு, அசோகரின் 'சாரநாத்'தில் உள்ள தூண் சிற்பங்களே. மௌரியரின் தூண் சிற்பங்கள் மிகவும் அழகானதும், நேர்த்தியானதும் ஆகும்.

புத்தரை மனித உருவில் சிற்பமாக வடிக்காத தேரவாத பௌத்தம் வலிமை குன்றியபோது மகாயானப் பிரிவு தோன்றி புத்தரை மனித உருவில் வணங்கத் தொடங்கினர். அப்போது புத்தரின் வடிவங்கள் பௌத்தக் கலை மரபுகளில் தோன்றி வளர்ந்தன. காந்தாரம், மற்றும் மதுரா பகுதிகளில் கி.பி. ஒன்றாம் நூற்றாண்டில் தோன்றி வளர்ந்த பௌத்தக் கலைகள் புத்தரின் வடிவங்களை அறிமுகப்படுத்தின. தொடர்ந்து புத்தர் மற்றும் பௌத்த சமய உருவ அமைப்பு படிமக் கலை தோன்றி இந்தியா முழுவதும் பரவியது.

கனிஷ்கர் (கி.பி. 78-120) காலத்தில் உருவான "காந்தாரக் கலை" கிரேக்க இந்தியக் கலப்பு கலந்த கலையாகும். இக்கலையில் புத்தரின் உருவம் வடிக்கப்பட்டது. புத்தரின் முதல் சிற்பம் கனிஷ்கர் காலத்தில் வடிக்கப்பட்டது. எனவே இந்தியாவில் படிமக் கலை கி.பி. ஒன்றாம் நூற்றாண்டிலிருந்து தான் தொடங்குகிறது எனலாம். இக்கால கட்டத்தி லிருந்து புத்தர் கடவுளாக வணங்கப்பட்டார்.

இந்தியாவில் உருவான பௌத்த சிற்பக் கலையானது பௌத்தம் பரவிய ஆசிய நாடுகளுக்கும் சென்றது. அந்தந்த நாட்டுப் பண்பாட்டுக் கூறுகளை இணைத்து பௌத்தக் கலைச் சின்னங்களும், சிற்பங்களும் அமைக்கப்பட்டன.

பௌத்த சமயம் எங்கெல்லாம் ஊடுருவிப் பரவியதோ அங்கெல்லாம் பௌத்தர்களின் கலையும் தொடர்ந்து சென்றது. இந்தியா இதுவரை கண்டறிந்த சிற்பக்கலை மரபுகள் எல்லாவற்றிலும் நேர்த்தியும் அழகும் வாய்ந்தவையாக, உள்ளவை பௌத்த சிற்பக் கலையே. பௌத்த சிற்பங்கள் வடிவமைக்கப்பட்டுள்ள முறை, கலைநயம், நுட்பம் ஆகியவற்றைப் பார்க்கும்போது, அவை தலைசிறந்த படைப்பு என்பதில் ஐயமில்லை என்று இந்திய தொல்லியல் ஆராய்ச்சி நிறுவன இயக்குநர் சர்.ஜான் மார்ஷல் கருத்துத் தெரிவித்துள்ளார்.

**புத்தர் சிலையமைப்புகள்:**

அமர்ந்த நிலையில், பொதுவாகத் தாமரை மலரில் அமர்ந்திருப்பார். இரு கால்கள் குறுக்காக மடக்கிய நிலையிலும், கண்கள் பாதியளவு மூடிய நிலையில் மூக்கின் நுனியைப் பார்த்துக் கொண்டிருக்கும், காதுகள் துளையிட்டு நீண்டு இருக்கும். தலைமுடி, சுருள் சுருளாக முடிக்கப்பட்டிருக்கும், அதன் மேல் ஞான ஒளிமுடிச்சி (ஒளி வட்டம்) தென்படும். உடல் முழுக்க ஆடையால் போர்த்தப்பட்டிருக்கும் (அங்க வஸ்திரம்).

கிடந்த நிலையில், புத்தரின் பரிநிர்வாணத்தைக் காட்சிச் சிற்பமாகக் காணமுடியும். புத்தர் படுத்துக்கொண்டு, ஒரு பக்கம் சாய்ந்து, தனது வலது கையை மடக்கித் தலைக்குக் கீழ் தலையணை போல் வைத்திருப்பார். அவரது முகத்தில் கருணையும், அமைதியும் ஒன்று சேர்ந்தது போல் காட்டப்பட்டிருக்கும்.

**முத்திரைகள்:**

புத்தர் கரங்களின் முத்திரைகளோடு (mudras) சித்திரிக்கப்படுகிறார். ஒவ்வொரு கரத்தின் முத்திரையும் பொருளுடையது. முத்திரை பட்டியல் மிகவும் நீளமானது. அதில் சிறப்பாக ஆறு

முத்திரைகள் புத்தரைச் சித்திரிப்பதற்காகவே தொடர்ந்து கையாளப்படுகின்றன. அவை, தியான முத்திரை, வரத முத்திரை, அபய முத்திரை, விதர்க்க முத்திரை, தர்மச் சக்கர முத்திரை, பூமிஸ் பர்ச முத்திரை.

**தமிழகத்தில் பௌத்தச் சின்னங்கள்**

தமிழகத்தில் பௌத்தம் தழைத்தோங்கிய இடமாக இருந்த காவிரிப்பூம்பட்டினத்தின் சிறப்பைப் பட்டினப்பாலை, சிலப்பதிகாரம் மற்றும் மணிமேகலை மூலம் அறிந்துகொள்ளலாம். தமிழகத்தின் முதல் பிக்கு என அறியப்படும் அறவணடிகள், தமிழகத்தின் முதல் பிக்குணி என்று அறியப்பட்டும் மணிமேகலையும் வாழ்ந்த இடமாக இவ்வூர் அமைகின்றது.

இன்றைக்குத் தமிழ்நாட்டில் பௌத்தக் கோயில்கள் குறைந்த அளவிலேயே உள்ளன. பல நூற்றாண்டுகளுக்கு முன்பாக இருந்த பௌத்தக் கட்டிட அமைப்பு புத்த விகாரம் என்று அமைந்தன. அண்மைக்காலம் வரை தமிழகத்தில் 200 இடங்களில் 600க்கும் மேற்பட்ட புத்தர் சிலைகள் கண்டெடுக்கப்பட்டுள்ளன.

கி.மு. மூன்றாம் நூற்றாண்டில் அசோக மன்னனின் உறவினன் மகேந்திரன் இலங்கைக்கு செல்வதற்கு முன் ஏழு புத்த விகார்களை நாகப்பட்டினத்தில் காட்டினார் என்று மணிமேகலை மற்றும் சிலப்பதிகாரம் கூறுகிறது. இந்த விகாரையின் தலைவராக இருந்தவர் தான் அறவணடிகள்.

பௌத்த விகாரங்கள் இருந்த நாகப்பட்டினத்தில் புத்தர் செப்புத்திருமேனிகள் உட்பட 60க்கும் மேற்பட்ட சிலைகள் இருந்துள்ளன. 1867ஆம் ஆண்டுவரை நாகப்பட்டினத்தில் புதுவெளி கோபுரம் (அ) சீனா கோபுரம் (அ) ஜெயின் பகோடா என்று அழைக்கப்படும் பௌத்த விகாரை இடித்து கிறித்துவ தேவாலயம் கட்டப்பட்டது.

இவ்விகார் அருகில் 800 ஆண்டுகள் பழமைவாய்ந்த இலுப்பை மரத்தின் அடியில் 3 அடிக்கு கீழ் 5 புத்தர் சிலைகள் கண்டெடுக்கப்பட்டது. நாகப்பட்டினத்தில் கண்டறியப்பட்ட முதல் புத்தர் சிலைகள் இச்சிலைகள் தான். இந்த 5 புத்தர் சிலைகளில் 4 சிலைகள் வெண்கலத்தால் (Bronze) ஆனது. ஒரு சிலை பீங்கான் பொருள் கலவையினால்(Porcelain) ஆனது. இந்த 5 புத்தர் சிலைகளில் ஒரு சிலையின் பீடத்தில் எழுத்துக்கள் பொறிக்கப்பட்டிருந்தது.

புத்த விகார் மீது புதிதாக கட்டப்பட்ட கிறித்துவ தேவாலயத்தை காணவந்த சென்னை கவர்னர் நேப்பியர் பிரபுவிற்கு 1868இல் கொடையாக ஒரு சிலை அளிக்கப்பட்டுவிட்டது. மேலும் நான்கு சிலைகளை 1871இல் பிரான்ஸ்க்கு கொடையாக அளிக்கப்பட்டுவிட்டது. இங்குக் காணப்பட்ட விகார் ஐந்து அடுக்கு மாடங்களைக் கொண்டது. 68 அடி உயரமுள்ளது. 41 சதுர அடி பரப்பளவு கொண்டது. செங்களாலும் மண்ணாலும் கட்டப்பட்டு, கூரையின் சுற்று பக்கங்களில் பிதுக்கம் சிற்ப வேலைப்பாடுகள் உடையது. இதில் இருந்து ஒரு புத்தர் சிலையும் கிடைத்தது.

இதே பகுதியில், 1963-64 ஆம் ஆண்டு மேலையூர் என்னும் பகுதியில் பல்லவனீச்சுரம் என்னும் கோவிலுக்கு அருகாமையில் புத்தவிகார் கண்டுபிடிக்கப்பட்டது. பகவன் புத்தரை வழிபடுவதற்கும், பிக்குகள் தங்குவதற்கும் ஏற்ற வகையில் அறைகள் கட்டப்பட்டிருந்தது, இவ்விகாரையின் ஒரு அறையில் ஓர் சிறிய வெண்கல புத்தர் சிலை கண்டெடுக்கப்பட்டது, மற்றோரு அறையில் சலவைக்கல்லால் ஆன பகவன் புத்தரின் பாத பீடிகை எனப்படும் புத்த பாதமும் கண்டெடுக்கப்பட்டது.

சுமத்ரா தீவு ஸ்ரீவிசய சூளாமணி வர்மன் நாகையில் வணிகத்தொடர்பு கொண்டிருந்தான். அவன் புத்த விகார் ஒன்றை எழுப்ப விரும்பினான். இடையில் அவன் மறையவே, அவன் மகன்

ஸ்ரீவிசயயோத்துங்க வர்மன் அவ்விகாரை பள்ளியை எழுப்பி அதற்கு தம் தந்தை நினைவாக சூளாமணி விகாரை என்று பெயரிட்டான். விகார் கட்டுமான பணிகள் சோழ அரசன் இராஜராஜ I (985-1016) காலத்தில் துவங்கியது. ஆனால் அவரது மகன் இராஜேந்திரன் I (1012-1044) காலத்தில் நிறைவடைந்தது. இப்பகுதியில் ஆய்வு செய்தபோது, இரண்டு செப்பேடுகள் கிடைத்துள்ளன. அதில், தமிழ் மற்றும் வடமொழியில், அரசன் ஆனைமங்கலம் என்ற கிராமத்தை உயரமான புத்த விகாருக்கு அளித்த செய்தியைக் குறிப்பிடுகிறது.

"சத்திரிய சிகாமணி வளநாட்டின் பட்டினக் கூற்றத்தில்
உலகத்திற்கு திலகம் போன்ற நாகப்பட்டினத்தில் தன்
உயரத்திற்கு பொன் மலையையும் சிறிதாக காட்டி
தன் அழகினால் வியப்படையச் செய்கின்ற சூளாமணி விகாரை"

என்று செப்பேடு விவரிக்கின்றது. 1910 ஆண்டு இங்கு நடைபெற்ற ஆய்வில் பல்வேறு இடங்களில் இருந்து ஒரு சில சிலைகளும், 1926ஆம் ஆண்டு வெளிப்பாளையம் என்ற இடத்திலிருந்தும் 1934ஆம் ஆண்டு நாணயக்கார தெரு என்ற இடத்திலிருந்தும் ஏராளமான சிலைகளும் தோண்டியெடுக்கப்பட்டன. சிலைகள் மற்றும் இஸ்துபா, விளக்கு மணி ஆகிய பொருட்கள் என மொத்தம் 350 வெண்கலங்கள் மண்ணிலிருந்து தோண்டியெடுக்கப்பட்டன. இதில் 70 சிலைகள், 3 இஸ்துபா, 1 விளக்கு 1 மணி என மொத்தம் 75 வெண்கலன்களை மட்டும் சென்னை அருங்காட்சியகத்தில் வைத்து விட்டு மற்ற சிலைகளை இந்தியா முழுவதும் உள்ள அருங்காட்சியகத்திற்கு அனுப்பபட்டுவிட்டன.

**காஞ்சி - சீன வரலாற்று ஆசிரியர் யுவான் சுவாங்:**

கி.பி 639 ஆம் ஆண்டில் பல்லவர் காலத்தில் காஞ்சி நகருக்குப் பயணம் வந்த சீன அறிஞர் காஞ்சி நகரத்தில் நூற்றுக்கணக்கான பௌத்த சங்கங்களும், 10,000 புத்த பிக்குகளும் இருந்தனர் என்றும், ஸ்தவீரா என்ற புத்த சக்கர போதனைகளைப் படித்துக்கொண்டு இருந்தனர் என்றும் பல விகாரங்களும் தூபிகளும் இடிந்து கிடந்ததென்று குறிப்பிடுகிறார். 1915 ஆம் ஆண்டு நடத்திய ஆய்வில் காஞ்சி காமாட்சி அம்மன் கோயிலில் பல்லவர் காலத்துப் புத்தர் சிலையை கண்டுபிடிக்கப்பட்டது. அச்சிலை 7 அடி உயரமும், 10அடி அகலமும் கொண்டதாக கி.பி. 7ஆம் நூற்றாண்டைச் சேர்ந்தது. இச்சிலை தற்பொழுது சென்னை அரசு அருங்காட்சியில் இருக்கிறது. காஞ்சியில் பல்லாவரம் அடுத்த கணிக்கிலுப்பை என்ற கிராமத்தில் பல்லவர் காலத்தைச் சேர்ந்த ஒரு புத்தர் சிலையும் தம்மச் சக்கரமும் இருந்தது. இங்கிருந்த புத்தர் சிலையை அழித்து அங்கே விநாயர் கோவில் கட்டப்பட்டது.

காஞ்சியில் காமாட்சிக் கோட்டத்தில் உள்ள அன்ன பூரணியம்மன் சன்னதி முற்காலத்தில் மணிமேகலையின் கோவிலாக இருந்ததாகவும், தருமராசர் என்ற புத்தருக்குக் கட்டிய கோயில் பின்ன்ர் தருமன் கோயிலாயிற்று என்றும் சிந்தாதேவி, தாரா தேவி ஆகிய பெண் தெய்வங்களின் கோயில்கள் அம்மன் கோயில்களாயின என்றுரைக்கிறார் தமிழறிஞர் திரு மயிலை சினி வேங்கடசாமி அவர்கள். தமிழகத்தின் பல்வேறு பகுதிகளில் தொடர்ந்து புத்தர் சிலைகளும் சில இடங்களில் தம்மச்சக்கரமும் கண்டறியப்பட்டுள்ளன.

**எனது ஆய்வுகளில் கண்டவை:**

'பள்ளி' என்று முடியும் ஊர்ப்பெயர்கள் வட தமிழகத்தில் பரவலாக உள்ளன. சான்றாக மாடப்பள்ளி, மட்றப் பள்ளி, சிம்மனப்பள்ளி உள்ளிட்ட ஏராளமான ஊர்ப்பெயர்களைக் கூறலாம். வட தமிழகம் ஒரு காலத்தில் சமண, பௌத்த குருமடங்கள் இருந்த பகுதியாகவும் பௌத்தம் சிறந்து விளங்கியதாகவும் அறியமுடிகின்றது. மேலும்,

- புத்தகரம்
- கௌதமபேட்டை
- நாட்டறம் பள்ளி – அறம் நாட்டிய பள்ளி
- திரிபத்தூர் – திரு பௌத்த ஊர்
- திரியாளம்

போன்ற பகுதிகள் பௌத்தத்தின் எச்சங்களாக விளங்கி நம்மை ஆய்வு செய்யத் தூண்டுகின்றன. இது தவிர பின்வரும் எனது கள ஆய்வுகளில் கண்டறியப்பட்ட வரலாற்றுத்தடயங்கள் அதற்கு மேலும் வலுசேர்க்கின்றன.

- மணல் கொள்ளி – கழுமர நடுகல்
- விநாயகபுரம் – துலுக்கலூர் - புத்தர் சிலை
- தம்மச்சக்கரம் – பெருமாபட்டு

**தீர்வுளும் முடிவுரையும்**

- அமைப்பாகச் செயல்படுதல்
- கள ஆய்வுகள் மேற்கொள்தல்
- சட்ட நடவடிக்கைகள் மூலம் மீட்டல்
- ஆவணப்படுத்திப் பாதுகாத்திடல்

இன்றைக்கு இந்தியாவின் பல்வேறு பகுதிகளில் காணப்படும் சமணத் தடயங்கள் முறையாகப் பராமரிக்கப்படுகின்றன. அது குறித்த அறிவிப்பு பலகையும் வழிகாட்டுதல் வழிகாட்டுப் பலகையும் ஆங்காங்கே சமண சமய குழுக்களால் ஏற்படுத்தப்படுகின்றது. ஆனால் பௌத்தத் தடயங்கள் முறையாகப் பராமரிக்கப்படுவதில்லை; அது குறித்த மேலாய்வுகள் இன்னும் மேற்கொள்ளப்படுவதில்லை; கள ஆய்வுகளில் கண்டறியப்படும் பௌத்தத் தடயங்கள் முறையாக ஆவணப்படுத்தப்படுவதில்லை; பௌத்தத் தடயங்களைப் பாதுகாப்பதற்கான குழுக்களோ, அமைப்புகளோ இன்னும் முறையாக ஏற்படுத்தப்படவில்லை; பௌத்தம் தொடர்பான வரலாற்று எச்சங்கள் காணப்படும் பகுதிகளில் கள ஆய்வுகளும் அகழாய்வுகளும் மேற்கொள்வதற்கு ஆவண செய்யப்படுவதில்லை. இவை யாவற்றையும் முறையாக மேற்கொள்ளும் போது பௌத்த அடையாளங்கள் மீண்டு எழும்; இந்திய வரலாறு மாறும் என்பதில் எவ்வித ஐயமும் இல்லை.

**திருப்பத்தூர் பகுதியில் கள ஆய்வுகள் நடைபெற்ற இடங்கள்:**

1. புத்தகரம்
2. கௌதமபேட்டை
3. நாட்டறம் பள்ளி
4. திரியாளம்
5. மணல் கொள்ளி
6. விநாயகபுரம்
7. பெருமாபட்டு